பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏரியின் ஆக்கிரமிப்பினை அகற்றி, அங்கே நீர்ப்பிடிப்பு இருக்கின்ற பகுதிகளில் மரங்கள் நடுகின்ற திட்டத்தினைப் பற்றிச் சொன்னார்கள். அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 323. திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

323—

தார்ச் சாலை

***3736—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரையுள்ள பகுதியை தார்ச் சாலையாக மாற்றும் பணியை வருங்காலத்தில் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு ஏறத்தாழ 2 வருடங்கள் ஆகின்றன. இந்த 2 வருட காலத்தில் செய்து முடிக்கப்படவில்லை. இப்போது 2003-2004ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சாலையைப் போடாததால், மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால், அந்தக் கரிமராஹட்டி கிராமத்திற்கு பேருந்துகள் போவதில்லை. பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள். எனவே அரசு, இந்த அவசரத் தேவையைக் கருதி, அந்தக் கிராமத்து மக்களுக்கு பேருந்து வசதி கிடைத்திட, இந்தச் சாலையை உடனடியாக அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கு மக்களின் தேவை என்ன என்பது--ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், டவுன் பஞ்சாயத்து, நகராட்சி ஆகிய பகுதிகளில் சாலை, தேவையைப் பொறுத்தவரைக்கும் Institute of Remote sensing, Anna University-யும், அதைப்போலவே பெங்களூரில் இருக்கிற Indian Space Research Organisation மூலமாகவும், Remote sensing மூலமாகவும் ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் அந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டினுடைய குறிப்பில் இது சேர்க்கப்படாத ஒரு நிலை இருக்கிறது. எனவேதான் வரும் ஆண்டிலே இந்தத் திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. ஏன் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது என்று அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் இறுதி அனுமதியைப் பெறுவதற்கு டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது மீண்டும் டெல்லியினுடைய அனுமதியைப் பெற வேண்டுமா என்று அமைச்சர் விளக்குவாரா? நான் சொல்லுகின்ற அந்தச் சாலையில் அந்தக் கிராமத்திற்குமேல் பேருந்துகள் போவதில்லை. அந்தக் கிராமத்திற்கு பேருந்து சென்று மீண்டும் திரும்பி வந்துவிடுகிறது. ஆனால், திரும்புகின்ற இடத்திலே கால்வாய்கள் எல்லாம் உடைந்து,

2003 ஏப்ரல் 25]

பேருந்து போகமுடியாத ஒரு கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்த அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, உடனடியாக இந்தச் சாலையைச் சீர் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் மைய அரசு 90 சதவீதம் மானியமாகக் கொடுக்கிறது. மாநில அரசினுடைய பங்கு 10 சதவீதம்தான். எனவே, மைய அரசினுடைய ஒப்புதல் தேவை. 2001-2002 ஆம் ஆண்டிற்காக சாலை மேம்பாடுகளுக்கு ரூபாய் 138.50 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டங்களும் மைய அரசாங்கத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு, வரப்பெற்று அது முடிகின்ற நிலையிலே தற்போது இருக்கின்றது. நடப்பு ஆண்டுக்கு ரூபாய் 215.16 இலட்சம் செலவிலே, மற்ற பல பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரைக்கும் Remote sensing மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே, ஆங்கு குன்னூர் நகராட்சிப் பகுதி மற்றும் அங்கு இருக்கின்ற ஊராட்சிச் சாலை ஆகியவற்றை ஆய்வு செய்து, ஊராட்சிச் சாலை நல்ல முறையில் இருப்பதாகவும், குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் சாலை சரியாக இல்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையொட்டி, நகராட்சி ஆணையரிடமும் இதுகுறித்து நாம் தகவலைக் கேட்டிருக்கிறோம். அந்தத் தகவலும் வரும். மாநில அரசினுடைய நிதியை இதற்காக அரசு தயாராக வைத்து இருக்கிறது. முடிந்தால் இந்த ஆண்டிலேயே இதை மேற்கொள்வதற்கு நாங்கள் முயற்சியினை மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜீ.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திற்கு வருடந்தோறும் 25 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய சர்க்காரிடமிருந்து பணம் வந்துகொண்டிருக்கிறது. 1991-96-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அந்த மாவட்டத்தினுடைய மக்களுடைய முன்னேற்றத்திற்காக சில இடங்களில், அரசு நிறுவனங்கள், சாலைகள்

போன்றவை எல்லாம் இடிந்து விழுந்தபோது அவற்றுக்கெல்லாம் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கெல்லாம் உத்தரவிடப்பட்டு, பணிகள் நடந்து கொண்டிருந்தன. ஆனால், கடந்த ஆட்சியிலே அந்தத் தடுப்புச்சுவர்கள் கட்டும் பணிகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த H.A.D.P. பற்றி நீலகிரி மாவட்டத்திலே சொன்னால், அதை Rivetment Department என்றுதான் சொல்வார்கள். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நீலகிரியிலுள்ள சாலைகள் எல்லாம் மழைக் காலங்களிலே மிகவும் மோசமாக இருப்பதனால், அதிக அளவிலே சாலைகளுக்கு இந்த நிதியை ஒதுக்குவதுடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட தடுப்புச் சுவர்கள் கட்டும் பணிகளுக்கும் அரசு அலுவலகங்கள் சில இடியும் நிலைமையிலே இருக்கின்றன — அந்த இடத்திற்கும், பொது இடங்களுக்கும் கண்டிப்பாக இந்த நிதியை அதிக அளவில் ஒதுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேம்பாட்டுப் பணிகளில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணியும் உள்ளடங்கியிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தகவல் தாருங்கள். நாங்களும் துறை அதிகாரிகள் மூலமாகத் தகவலைப் பெறுகிறோம். கட்டாயம் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு முக்கியத்துவம் தரப்படும்; நிதி ஒதுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 324, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

324—

கணினிப் பயிற்சி மையங்களை முறைப்படுத்துதல்

***2241—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருகி வரும் கணினிப் பயிற்சி மையங்களைக் கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்த அரசு முயற்சி செய்யுமா?